**தலைப்பு – 177 கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

1 ஆம் பகுதி

கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

---

**1 அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 206 | கலாசார அலுவல்கள் திணைக்களம் |

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,640,626,987 ஆக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,377,529,329 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய ஏற்பாட்டிலிருந்து சேமிப்புக்கள் ரூபா 127,658,825 மற்றும் ரூபா 135,438,833 தொகையான அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டில் 10.9 சதவீதம் மற்றும் 28.4 சதவீதமாக இருந்தன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 177 | 1,163,880,000 | 1,036,221,175 | 127,658,825 | 10.9 |
| 206 | 476,746,987 | 341,308,154 | 135,438,833 | 28.4 |
| மொத்தம் | 1,640,626,987 | 1,377,529,329 | 263,097,658 | |

## 2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 17701 | 32,000,000 | 16,262 ,818 | 14,000,000 | 15,146,701 | 110,000,000 | 65,190 ,519 |
| 20601 | 19,000,000 | 10,684,781 | 8,000,000 | 9,485,835 | 87,000,000 | 39,615,396 |

### 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினதும் வைப்புக் கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 47,748,431 ஆக இருந்ததுடன், அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 6000/0000/00/0015/0054/000 | 37,538,310 |
| கலாசார அலுவல்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0088/000 | 10,210,121 |
| | | 47,748,431 |

## பகுதி 2

**ஒவ்வொரு தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை**

### 1. தலைப்பு 177 – கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 05 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள் ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க நடாத்திச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் என்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற கணக்குகளையும் இணக்கக்கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாய பூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) முதல் (ஊ) பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 முதல் 1.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் காணப்படாமை**

அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பேணப்படாமல் இருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| (i) நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| (ii) மோட்டார் வாகனப் பதிவேடு | நிதிப் பிபரமாணம் 1647(உ) |
| (iii) நுகர்வுப் பொருள் பதிவேடு | நிதிப் பிபரமாணம் 1647(இ) |
| (iv) நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) கணக்காய்விற்குச் சான்றுகளின்மை**

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மோட்டார் காரொன்று மற்றும் 05 முச்சக்கர வண்டிகள் என்பவற்றிற்குரிய அவ்வாகனங்களின் ஓட்டம், பராமரிப்பு அல்லது ஓட்டத்திலிருந்து அகற்றியமை தொடர்பில் எதுவித தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாட்டு ஒதுக்கீடு மற்றும் விடுவித்தல் தொடர்பான ஆவணங்கள் உட்பட ஒவ்வொரு நிர்மாணத்திற்குரிய திட்டம், கிரய மதிப்பீடு, அளவீட்டுப்பத்திரம், அளவீட்டறிக்கை, பட்டியல்கள் மற்றும் நிர்மாணங்களின் செயல் முன்னேற்ற அறிக்கை உள்ளடக்கப்பட்ட கோவைகள் முழுமையாக பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

--------------------------------------------------------------------------------

கலாசார மற்றும் கலை விவகார அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாவொன்றிற்கு 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காததுடன், அந்த ஐயவினாவிற்குட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி (பெறுமதி சேர் வரியுடன்) ரூபா 28,255,312 ஆக இருந்தது.

**(ஈ) பாதீட்டு முரண்**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,000,000 ஆன தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 3 மூலதன செலவின விடயங்களுக்கும் 02 மீண்டெழும் செலவின விடயங்களுக்கும் மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 37 சதவீதத்திற்கும் 97 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 2 மூலதன செலவின விடயங்களுக்குரிய ரூபா 30,000,000 கூட்டுத் தொகையான மொத்த ஏற்பாடும் நி.பி 66 இன் மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன. மேலும் 4 மூலதன செலவின விடயங்களின் ரூபா 111,000,000 மொத்த மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டிலிருந்து 34 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையான வீச்சில் நி.பி 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(iv) நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக, இரண்டு செலவின விடயங்களின் சேமிப்புக்களை விஞ்சி மீளாய்வாண்டினுள் ரூபா 1,015,863 தொகையான பொறுப்புக்களுக்கு உட்பட்டிருந்தது. மேலும் 4 செலவின விடயங்களில் சேமிப்புக்கள் இல்லாதிருக்கையில் ரூபா 1,760,902 ஆன பொறுப்புக்களுக்கு கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

6000/0/0/15/540 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 6,635,068 பெறுமதியான 65 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

-------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 17701 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் நிலுவையாக இருந்த காலப்பகுதி 1 ஆண்டு முதல் 15 வரையான அறவீடுகள் நிலுவையாக இருந்த 20 கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,155,493 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ii) 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதி 118 ஆம் இலக்க அரசாங்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1 மற்றும் 1.1.6 பிரிவின் பிரகாரம் இடமாற்றம்

பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளை தாமதமில்லாமல் கணக்குப் பொழிப்புக்கள் மூலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அச்சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் தீர்வு செய்யப்படாத கடன் மீதிகளை காண்பிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச்சென்ற 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,265,398 மொத்தத் தொகையான கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

## 1.4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வு சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நுவரெலியா கலாசார நிலையத்தின் 2010 இன் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 110 தகடுகளை ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அவை ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சரின் உத்தியோகபூர்வ வீடு மற்றும் அமைச்சு அலுவலகம் என்பவற்றிற்கு கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட 48 பொருள் வகைகளின் 129 உருப்படிகள் தொடர்பாக எதுவித பொருள் மெய்மையாய்வொன்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொண்டிருக்கவில்லை. இந்த 48 பொருள் வகைகளில் 29 மின் உபகரணங்களாகும்.

**(ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

(i) அமைச்சினால் கீழே காட்டப்பட்டுள்ள வாகனங்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தன.

| வாகன வகை | வாகனங்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|
| மோட்டார் கார் | 2 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக |
| மோட்டார் கார் | 2 | கலாசார அலுவல்கள் அமைச்சு | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக |
| ஜீப் வண்டி | 1 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக |
| கெப் வண்டி | 2 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக |
| கெப் வண்டி | 1 | தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 13 ஆண்டுகளாக |

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்த 05 மோட்டார் வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ii) மத்திய கலாசார நிதியத்திற்குரிய கெப் வண்டியொன்று கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சரின் தேவைப்பாட்டிற்காக சாரதியுடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக சனாதிபதி செயலாளரின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

பின்வரும் அவததானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சரவை அமைச்சரொருவருக்காக ஒதுக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை சனாதிபதி செயலாளரின் 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 3 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சருக்கு 5 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அத்தோடு அமைச்சரின் சேவைகளுக்காக இணைக்கப்படக்கூடிய சாரதிகளின் எண்ணிக்கை பாதுகாப்பு வண்டியின் சாரதி தவிர்த்து இரண்டு பேராக இருந்த போதிலும், 4 சாரதிகள் அவ்வாகனங்களுக்காக இணைக்கப்பட்டிருந்தனர்.

(ii) குழுப் போக்குவரத்திற்காக நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகனங்களில் போவதற்கும் வருவதற்குமாக பயன்படுத்தக்கூடிய ஆகக்கூடிய தூரம் அலுவலகத்திலிருந்து 50 கிலோமீற்றர் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 2013 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதியில் அலுவலகத்திலிருந்து வெயாங்கொடை வரை 80 கிலோமீற்றர் தூரத்திற்கு குழுப் போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு உரித்துள்ள உத்தியோகத்தர்கள் மேலதிக பதவியொன்றில் கடமை மேவுகை செய்வதற்காக வாகனங்களை பயன்படுத்த முடியாத போதிலும், மத்திய கலாசார நிதியத்தின் பிரதி பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய கலாசார அமைச்சின் மேலதிகப் பணிப்பாளரால் (நிர்வாகம் மற்றும் நிதி) 2013 சனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மத்திய கலாசார நிதியத்திற்குரிய ஒதுக்க வாகனமொன்றை பயன்படுத்தியிருந்ததுடன், 12,454 கி.மீ தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**(உ) பொறுப்பேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ரூபா 15,771,125 தொகையான அமைச்சின் நிதிஏற்பாட்டை செலவிட்டு நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திறந்து வைக்கப்படாத இரத்தினபுரி மாவட்டத்தின் 5 கலாசார நிலையங்கள் உட்பட 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவந்த 6 கலாசார நிலையங்கள் என்பவற்றின் நிலத்தின் உரித்து அமைச்சிற்கு முறையாக பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலாசார நிலையங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 15,007,728 தொகை அமைச்சின் நிதிஏற்பாட்டிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**(ஊ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் ரூபா 18,651,556 தொகையாக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் முழுவதும் 01 ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியதாக இருந்தன.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| ----------------------------------------------------- | ------------- | -------------------------------- |
| | ரூபா | |
| (i) பொது நிருவாகச் சுற்றறிக்கை<br>----------------------------------------- | - | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு 06 மாதங்களுக்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் அவ்வாறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ii) <u>அரச நிதி/ சனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கை</u><br>2010 யூலை 14 ஆம் திகதிய PF/FS/A.Vehi/ 2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி, 2013 யூன் மாதம் 05 ஆம் திகதிய PCMD/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | - | பழுதுபார்க்கப்பட வேண்டிய அல்லது கைதவிர்க்கப்பட வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டு 03 மாதங்களுக்குள் வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த 2 வாகனங்கள் மற்றும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த 4 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) தேசிய பாதீட்டு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2013 ஏப்ரல் 29 ஆம் திகதிய BD/NI/177/2013 ஆம் இலக்க கடிதம் | 185,920 | உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களிற்காக இணைக்கப்பட்டுள்ள சாரதிகளுக்கு மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லையென இக் |

கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கலாசார மற்றும் கலை விவகார அமைச்சு செயலாளரின் சாரதிக்கு வீட்டிலிருந்து கடமைக்காக செல்வதற்கும் வருவதற்குமாக மோட்டார் சைக்கிளொன்றை கொள்வனவு செய்து அவரின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (iv) | <u>கொள்வனவுச் சுற்றறிக்கை</u> 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய கொள்வனவு சுற்றறிக்கை இலக்கம் 08 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3 மற்றும் 4.3.2 ஆம் பந்திகள் | - | கலாசார நிலையமொன்றை நிர்மாணிப் பதற்கான கிரயம் ரூபா 10 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட 06 கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் போது மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (v) | 2006 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 1467/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | - | 2006 இன் 01 ஆம் இலக்க வலது குறைந்தோர் தொடர்பான (நுழைவு) கட்டளையாக அறிமுகப்படுத்தப்பட்ட கட்டளையின் பிரகாரம் வலது குறைந்தோருக்கு பிரபல்யமான கட்டிடங்களுக்குள் இலகுவாக நுழையக்கூடிய வகையில் நிர்மாணத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் நிர்மாணிக்கப்படுகின்ற நிர்மாணத் திட்டங்கள் அப்பிரமாணங்களின் பிரகாரம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 1.7 செயற்திட்டத்தை அமுலாக்கலில் நலிவுகள்

-----------------------------------------------------------------------------

(அ) <u>செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்</u>

பிரதேச செயலாளர் பிரிவொன்றிற்கு ஒன்று வீதம் கலாசார நிலையங்களை அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் நிர்மாணிப்பதற்காக ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த பின்வரும் 02 கலாசார நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் அமைச்சினால் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | மொத்த கிரய மதிப்பீடு | விடுவிக்கப்பட்ட தொகை | 2013.12.31 வரை யிலும் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி | கைவிடப்பட்ட மைக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| இரத்தினபுரி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசம் - இரத்தினபுரி கலாசார நிலையம் | 13,892,000 | 889,626 | 2,162,471 | காணியின் உரித்தை பொறுப்பேற்காமல் நிர்மாணம் மேற்கொண்டமை |
| கஹவத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசம் - கஹவத்த கலாசார நிலையம் | 9,916,464 | 5,000,000 | 1,126,910 | நிர்மாணக் காணி மண் சரிவிற்கு உட்பட்டிருந்தமை |

## 1.8 செயலாற்றல்

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தின் 17 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களுக்காக கலாசார நிலையம் வீதம் அமைப்பதற்கு 2000 ஆம் ஆண்டிலிருந்து திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வந்த போதிலும், அவற்றில் போதியளவு செயன்முன்னேற்றம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 வரையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 6 நிலையங்களின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்டம் (கலாசார நிலையம்) | மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் | முதலாவது தவணை விடுவிக்கப்பட்ட ஆண்டு | 2013.12.31 இல் உள்ளவாறு விடுவிக்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு | 2013.12.31 இல் உள்ளவாறு மொத்த செலவினம் | மொத்த கிரய மதிப்பீட்டின் சதவீதமாக நிதி செயன் முன்னேற்றம் | 2013.12.31 இல் உள்ளவாறு முதலாவது தவணை விடு விக்கப்பட்ட ஆண்டிலிருந்து முன்னைய ஆண்டுகளின் எண்ணிக்கை | பௌதீக செயன் முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா | | | |
| கொலன்ன கலாசார நிலையம் | 16,029,924 | 2008 | 2,411,657 | 676,715 | 4.2% | 5 ஆண்டுகள் அளவில் | அத்திவாரம் இடப்பட்டுள்ளது. |
| எஹலியகொடை கலாசார நிலையம் | 12,127,035 | 2010 | 4,962,538 | 3,779,927 | 31% | 3 ஆண்டுகள் அளவில் | முதலாம் மாடியின் சிலப் வரை நிர்மாணிக் கப்பட்டுள்ளது |
| ஓப்பநாயக்க கலாசார நிலையம் | 14,221,718 | 2010 | 2,926,812 | 2,859,309 | 20% | 3½ ஆண்டுகள் அளவில் | கீழ் மாடி நிர்மா ணிக்கப்பட்டு கூரை அடிக்கப் பட்டுள்ளது. |
| வெலகெபொல கலாசார நிலையம் | 11,040,647 | 2010 | 2,876,890 | 2,039,278 | 18% | 3 ஆண்டுகள் அளவில் | அத்திவாரத்துட ன் கொங்கிரீட் தூண் நிர்மாணி க்கப்பட்டு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | அஸ்பஸ்டஸ் கூரை அடிக்கப்பட்டுள் ளது. |
| கொடகவெல கலாசார நிலையம் | 1,954,332 | 2009 | 1,954,332 | 1,954,332 | 100% | 4 ஆண்டுகள் அளவில் | பழைய கட்டிட மொன்று திருத்தியமைக்க ப்பட்டுள்ளது. |
| இம்புள்பே கலாசார நிலையம் | 10,073,248 | 2010 | 5,000,000 | 4,374,882 | 43% | 3 ஆண்டுகள் அளவில் | பிரதான சுவர்கள் கட்டி கூரை நிர்மாணி க்கப்பட்டுள்ளது . |
| | ------------------ | | ------------------ | ------------------ | | | |
| | 65,446,904 | | 20,132,229 | 15,684,443 | | | |
| | ======== | | ======== | ======== | | | |

(i) இந்நிர்மாணங்களின் போது பின்வரும் பொதுவான நலவுகள் அவதானிக்கப்பட்டன.

- கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சினால் இச்செயற்திட்டங்களை அமுல்படுத்தப்படும் மாவட்ட செயலகம் / பிரதேச செயலகங்களுக்கு நிதி ஏற்பாட்டை விடுவிப்பதற்கு முன்னர் அந்நிறுவனங்களுடன் எழுத்து மூல இணக்கப்பாடொன்றோ அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றோ மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை.
- நிர்மாணங்களுக்குரிய மொத்த கிரய மதிப்பீடு, திட்டங்கள், ஒவ்வொரு கட்டத்திற்குரிய காலப்பகுதி மற்றும் செயன்முன்னேற்றம் என்பன உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கைகளை தயாரிக்காமை.
- செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்தல் மற்றும் விடுவித்தல் என்பன முறையற்ற விதத்தில் மேற்கொண்டிருந்தமை மற்றும் நிர்மாணம் தொடர்பாக எதுவித மேற்பார்வையொன்றும் மேற்கொள்ளப்படாமை, பௌதீக முன்னேற்றம் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் நிதி ஏற்பாடுகளை விடுவித்திருந்தமை.
- மேற்குறித்த 06 கலாசார நிலையங்களுக்காக பிரதேச செயலாளர்களுடனான கடிதப் பரிமாற்றல்கள், பொருத்தமான நிலப் பிரதேசத்தை தெரிவுசெய்வதற்கும் சாத்தியவள அறிக்கை என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் 05 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தன. மேலும் அந்நிலையங்களுக்காக ஆரம்ப தவணை விடுவிக்கப்பட்டு 03 ஆண்டு முதல் 06 ஆண்டு வரையான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், அச்செயற்திட்டம் எவற்றிலும் போதியளவு பௌதீக முன்னேற்றமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) திருத்திய மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 16,029,924 தொகையான கொலன்ன கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. 2013 யூலை 30 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 2,411,657 ஆக இருந்தது. 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 676,715 தொகை செலவு செய்து அடித்தளம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது வரையில் 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும், அந்நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆதிவாசிகள் சமூகத்தினருக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் முதலாம் கட்டத்தின் கீழ் 100 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2011, 2012 ஆம் ஆண்டுகளில் மொத்த மதிப்பீட்டு ஏற்பாட்டுத் தொகையான ரூபா 13,159,000 நிர்மாணம், பொறியியல்

சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2012 ஏப்ரல் வரையில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 30 வீடுகளின் நிர்மாணம் 2013 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iv) இரண்டாம் கட்டத்தின் கீழ் தம்பானப் பிரதேசத்தில் 25 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு 2013 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் தொகையான ஏற்பாட்டை நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அந் நிர்மாண நடவடிக்கைகள் 2014 மே வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் நிறுவனங்களின் திருத்தவேலைகள், பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் நிர்மாணங்களின் போது எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்வு செய்யும் அடிப்படையில் 2009 பெப்ரவரி 19 ஆம் திகதி அமப/09/0193/354/003 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனி உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அக்கம்பனியின் செயற்பாடுகளில் சர்ச்சைக்குரிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இக்கம்பனி உருவாக்கப்பட்டதன் நோக்கங்களிற்கு புறம்பாக தற்போது மத்திய கலாசார நிதியத்திற்காக தொழிலாளர்களை வழங்கும் நிறுவனமொன்றாக செயற்படுவதுடன், இக்கம்பனியின் ஊழியர்களுக்காக சம்பளத்தை செலுத்துவதற்கு மத்திய கலாசார நிதியத்திற்கு நேர்ந்திருந்தது. 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 114,879,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், கம்பனி உழைத்த இலாபம் 35 – 40 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) கம்பனியை உருவாக்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத் திருத்தத்தின் பிரகாரம் பாதுகாப்பு தன்மையிலான சிறந்த நிலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அவ் உயர் நிலைமை இனங்காணக்கூடிய விசேட நிறுவனமொன்றாக இதனை உருவாக்குவது இதன் நோக்கமாக இருந்த போதிலும், இக்கம்பனி அவ்வாறான தொழில்நுட்ப இயலளவுடன் கூடிய நிறுவனமொன்றாக முன்னேற்றமடைந்திருக்கவில்லை.

(iii) கம்பனியின் சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் மத்திய கலாசார நிதியத்தின் இயந்திர உபகரணங்களிலிருந்து ஏதேனும் வருமானமொன்று நிதியத்திற்கு பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கம்பனியால் நிதியத்திற்கு வருமானமொன்றை வழங்கக் கூடிய முறையில் இயந்திர உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(iv) ஆரம்பத்தில் அமைச்சு செயலாளர் உத்தியோகபூர்வ தலைவராக செயற்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் கம்பனியின் கட்டுப்பாட்டு துறையில் அமைச்சின் எந்தவொரு உத்தியோகத்தரும் உள்ளடக்கப்படாதிருந்தமை

(v) கேள்வி கோரலின்றி இக்கம்பனிக்கு நேரடியாக ஒப்பந்தத்தை கைளிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரமொன்று கிடைக்கப்பெறாதிருந்த போதிலும், மத்திய கலாசார நிதியம் மற்றும் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் சில நிர்மாணங்களை நேர் ஒப்பந்த முறைமையின் கீழ் இக்கம்பனிக்கு கையளித்திருந்தமை கொள்வனவு வழிகாட்டி கைநூலின் 3.5 (உ) பிரமாணம் மீறப்பட்டிருந்தது.

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சினால் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) தமது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக மத்திய கலாசார நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவியில் கடமை மேவுகை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவரால் நிரந்தர பதவிக்கு உரித்தான ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு மேலதிகமாக மத்திய கலாசார நிதியத்தின் வாகனமொன்றையும் பயன்படுத்தியிருந்தார். வாகனம் பயன்படுத்தப்பட்ட 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் முதல் ஏப்ரல் 23 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரித்தாக சாரதி மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினமாக மத்திய கலாசார நிதியத்திலிருந்து ரூபா 86,463 தொகையும் கலாசார அமைச்சிலிருந்து ரூபா 51,285 தொகையும் செலவிடப்பட்டிருந்தன.

## 1.11 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் தொடர்பான தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

கீழே காட்டப்பட்டுள்ள நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய காணியை கலாசார மற்றும் கலைகள் விவகார அமைச்சிற்கு பொறுப்பேற்காமை காரணமாக அதற்காக செலவிடப்பட்ட ரூபா 15,809,299 ஆன செலவினம் சிக்கனமற்ற நிலைமைக்கு மாறியிருந்தன.

| கலாசார நிலையத்தின் பெயர் | திருத்தியமைத்தல்/புதிய நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் | சிக்கனமற்ற நிலைமைக்கு மாறியிருந்தமை |
|---|---|---|
| | ரூபா | |
| இரத்தினபுரி கலாசார நிலையம் | 2,162,471 | காணியின் உரித்தை கையேற்காமல் நிர்மாணத்தை மேற்கொண்ட காரணத்தினால் அக்காணி மற்றும் செய்யப்பட்ட வேலைப்பகுதிக்கான காணி உரித்தை நிறுவனம் கையேற்றல் |
| எலபாத கலாசார நிலையம் | 2,990,611 | காணியின் உரித்தை கையேற்காமல் நிர்மாணத்தை மேற்கொண்டதன் பின்னர் காணி உரித்துடைய நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக மீண்டும் வழங்க நேர்ந்திருந்தமை. |
| நிவித்திகல கலாசார நிலையம் | 1,181,200 | காணியின் உரித்தை கையேற்காமல் நிர்மாணத்தை |

| | | |
|---|---|---|
| | | மேற்கொண்டதன் பின்னர் காணி உரித்துடைய நிறுவனம் காணியை வழங்குவதற்கு இணங்காமை. |
| கஹவத்த கலாசார நிலையம் | 1,126,910 | நிர்மாணிப்புக் காணியில் மண்சரிவு ஏற்படல் |
| எம்பிலிபிட்டிய கலாசார நிலையம் | 8,348,107 | காணியைக் கையேற்காமல் நிர்மாணம் மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் பின்னர் அதனை கையேற்பதில் சிக்கல் காணப்பட்டமை |
| | ------------------ | |
| | 15,809,299 | |
| | ======== | |

## 1.12 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது கீழே காட்டப்பட்டுள்ள நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டிலும் ஆண்டின் இறுதியிலுமோ அல்லது அண்மித்த தினமொன்றிலோ நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அமைச்சிற்குச் சொந்தமான 52 வாகனங்கள் தொடர்பாக எவ்வித மெய்மையாய்வொன்றும் 2013 ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் அவ்வாகனங்களின் உதிரிப்பாகங்கள் காணாமல் போகின்றமை, செயற்பாடற்றிருத்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் வாகனங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றில் அவ்வாகனங்களின் கிரயம், பெறுமானத்தேய்வு வீதம், கைதவிர்த்தல் விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கி நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.13 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 14 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 579 | 513 | 66 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 04 | 02 | 02 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 409 | 397 | 12 | - |
| (v) | ஏனைய( அமைய) | - | 19 | - | 19 |
| | மொத்தம் | 1006 | 926 | 80 | 19 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 80 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொண்ட மனித வளங்கள்

அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| வீடியோ கமரா தொழில்நுட்பவியலாளர் | 1 | மத்திய கலாசார நிதியம் | 1989.06.01 முதல் இதுவரை |
| கமரா தொழில்நுட்பவியலாளர் | 1 | - மேற்படி - | - மேற்படி - |
| கமரா தொழில்நுட்பவியலாளர் | 1 | - மேற்படி - | 2001.01.27 முதல் இதுவரை |

| | | | | |
|---|---|---|---|---|
| எழுதுவினைஞர் | 1 | - | மேற்படி - | 2000.04.09 முதல் இதுவரை |
| தொழிலாளர் | 4 | - | மேற்படி - | வெளிப்படுத்தப்படவில்லை. |

## 2. தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 19 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (ஊ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தாக அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

திணைக்களத்தினால் 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

| விடய இலக்கம் | கணக்கின் பெயர் |
|---|---|
| 20601 | அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று |

### (ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றை பேணாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாமல் இருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|

| | |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| ஒதுக்கீட்டு வாக்குப் பணப் பேரேடு | நி.பி 447 (1) (3) (4)(6) (7) (9) |
| கணனி சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பிரதான பொருளிருப்புப் பதிவேடு (தேசிய கலாபவனம் மற்றும் ஜோன் த சில்வா ஞாபகார்த்த கலையரங்கம்) | நி.பி. 751, 754 மற்றும் 454 |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

-----------------------------------------------------------------

கணக்காய்விற்கான சான்றுகளின்மை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(i) 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மொத்த பிரதேச மற்றும் கிராமிய கலாசார அதிகாரக்குழுக்களின் எண்ணிக்கை, பிரதேச மற்றும் மாவட்ட அதிகாரப் பரிதேசங்களில் நிதியங்களைத் தாபித்தல் மற்றும் அவற்றின் செலவினம் தொடர்பான விபரங்கள், ஒவ்வொரு அதிகாரக்குழுக்களுக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படாதிருந்தமை மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் பௌதீக இருப்பினை உறுதிப்படுத்தாத காரணத்தால் ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிப்பு (i) இன் கீழ் நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு அறிக்கை மூலம் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 38,838,583 ஆன மீதிகளின் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை.

**(ஈ) பாதீட்டு முரண்கள்**

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 08 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 60 சதவீதத்திற்கும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(ii) 206-2-3-2-2502 (தேசத்திற்கு மகுடம்) செலவின விடயத்தின் கீழ் "உதுரு தகுனு மிதுரு செவன" நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக நி.பி 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்த ரூபா 8 மில்லியனில் ரூபா 6,639,508 தொகை அதாவது 83 சதவீதம் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(iii) நடைமுறையல்லாத சொத்துக்கள் அசைவு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் சேர்த்தல்களின் பெறுமதி, மூலதன செலவினம் (DGSA - 4) இல் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூபா 724,257 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

---

02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 683,631 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 20601 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,046,385 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களுக்கான கடன் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதிக்கும் திறைசேரி கணனி

அறிக்கையின் பிரகாரம் வரவு மீதிக்கும் இடையே ரூபா 60,556 ஆன வேறுபாடு காணப்பட்டது. 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வேறுபாட்டிற்கு காரணங்களை விளக்கும் இணக்கக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கடன் முற்பண கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதி என்பவற்றிற்கிடையே ரூபா 336,071 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. 1994 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 மே 13 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் மூலம் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கலாசாரத் திணைக்களத்தினால் 2014 மே 31 ஆந் திகதி வரையலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2012 ஆம் ஆண்டிற்கே மெற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தேசிய கலாபவனம் மற்றும் ஜோன் த சில்வா ஞாபகார்த்த கலையரங்க வளவில் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த 08 வகையான பொருட்கள் தொடர்பில் 36 உருப்படிகளின் மிகை உட்பட 123 வகையான பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாகவும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாகவும் நிதிப் பிரமாணம் 102 மற்றும் 757(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

(i) திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் ரூபா 41,581,381 தொகையாக இருந்ததுடன், அப்பொறுப்புக்கள் முழுவதும் 01 ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியதாக இருந்தது.

(ii) 206-2-3-6-1405 (தேசிய கலைவிழா) ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் மீளாய்வாண்டிற்கான சேவைகளுக்காக தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 1,489,784 ஆன தீர்க்கப்படாத பொறுப்புக்களுக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(iii) 206-2-3-7-2502 (ஜோன் த சில்வா கலை கேந்திர நிர்மாணம்) ஆம் இலக்க செலவின விடயத்தின் கீழ் ஒப்பந்தக்காரரொருவருக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா 937,862 ஆன பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கின் DGSA 8(ii) பொறுப்புக்கள் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (i) <u>இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை</u> | | |
| தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 3.18 ஆம் பிரிவு | 26,000 (இடர் கடன்) | 4 ஆண்டு காலப்பகுதிக்காக சம்பளமற்ற கல்வி விடுமுறை பெற்றுக்கொண்டு 2009 ஆகஸ்ட் 20 ஆம் திகதி வெளிநாடு சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதி ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) <u>நிதிப் பிரமாணம்</u> | | |
| நிதிப் பிரமாணம் 94(i) | 1,150,359 | 4 செலவின விடயங்களில் ரூபா 46,697 கூட்டுத்தொகையான சேமிப்புக்களை விஞ்சி ரூபா 1,150,359 தொகையான பொறுப்புக் களுக்காக கடப்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. |
| நிதிப் பிரமாணம் 102,103 மற்றும் 104 | - | அரச இசை குழுவின் பொறுப்பிலும் தேசிய கலாபவண வளவில் இருந்து காணாமல் போன 08 பொருள் உருப்படிகளுக்குரிய 13 பொருள் அலகுகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 102, 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| நிதிப்பிரமாணம் 128(1) (உ) | - | தேசிய கலாபவனம் மற்றும் ஜோன் த |

| | | |
|---|---|---|
| | | சில்வா ஞாபகார்த்த கலையரங்க வளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த விலை கூடிய சங்கீத உபகரணங்கள் சேதமடையாமல் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக போதிய ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 396 | 90,079 | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட போதும் 06 மாதங்கள் கடந்த ரூபா 90,079 பெறுமதியான 21 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயலாற்றல்

### போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2013 ஆம் ஆண்டின் போது கலாசார அதிகாரக்குழு மூலம் செயற்படுத்துவதற்காக 10 வேலைத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2013 யூன் 30 ஆம் திகதி வரை அந்த 10 வேலைத்திட்டங்களில் 04 பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 02 வேலைத்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரதேச செயலக அதிகாரப் பிரிவிலும் ஒரு கலைஞரொருவருக்காக வீடொன்றை அமைத்துக் கொடுக்கும் செயற்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஒரு கலைஞருக்கேனும் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) திணைக்களத்தின் கலாசார மேம்படுத்தல் நடவடிக்கைகளை கிராம மட்டத்தில் விரிவாக்கும் நோக்கில் சமூர்த்தி வலயங்களை அடிப்படையாகக் கொண்டு கிராம கலாசார அதிகாரக்குழுக்களை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டினுள் கிராம கலாசார அதிகாரக்குழு மூலம்

எதுவித வேலைத்திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் இல்லாமையால் கலாசார அதிகாரக்குழு தாபிப்பதின் நோக்கம் வெற்றியளித்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 03 மாதங்களுக்கு ஒரு முறை மாகாண மட்டத்தில் கலாசார பணிப்பாளரோ அல்லது அவரால் பெயரிடப்படுகின்ற உத்தியோகத்தரொருவராலோ கலாசார அதிகாரக்குழுவின் செயற்பாடு தொடர்பாக செயல் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 01 வீதம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 4 மாகாணங்களிலும் 01 செயல் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் வீதம் நடாத்தப்பட்டிருந்ததுடன், ஏனைய 4 மாகாணங்களில் எந்தவொரு கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் கலாசார அதிகாரக்குழு செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றம் அடையப் பெற்றிருக்கவில்லை.

## 2.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்

(அ) சீராக்கம் செய்யப்பட வேண்டிய நிலுவை

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சீராக்கம் தொடர்பான விபரங்கள் | | <u>காலப்பகுப்பாய்வு</u> | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு கீழானவை | 1 ஆண்டிற்கு மேற்பட்ட 3 இற்கு கீழானவை | 3 ஆண்டு களிற்கு மேற்பட்டவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையாகாத வைப்புக்கள் | 5,146 | 14,366 | 14,280 | 33,792 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொடுப்பனவுக்கு முன் வைக்கப்படாத காசோலைகள் | 90,079 | - | - | 90,079 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | 6,104 | - | - | 6,104 |
| (iv) | இனங்காணப்படாத செலவுகள் | 13,358 | - | - | 13,358 |

* 01 வருடத்திற்கு மேற்பட்ட 3 வருடங்களுக்கு குறைந்த தீர்வையாகாத வைப்புக்கள் ரூபா 14,366 தொகையும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்வையாகாத வைப்புக்கள், ரூபா 14,280 தொகையும் இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* ரூபா 13,358 தொகையான இனங்காணப்படாத செலவு மீதிகள் மற்றும் ரூபா 6,104 தொகையான வரவு மீதிகள் என்பவற்றை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2013 அரச சாஹித்திய விழாவை நடாத்துவதற்காக செலவிடப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 7,191,881 ஆக இருந்ததுடன், விழாவின் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனை நடாத்துவதற்காக அதில் ரூபா 4,566,538 தொகை செலவிடப்பட்டிருந்தது. அரசின் ஈடுபாட்டின் கீழ் இவ்விழாவை நடாத்துவதன் பிரதான இலக்கு கலைஞர்களை தேசிய ரீதியில் மதிப்பிடுவதாக இருந்த போதிலும், கலைஞர்களை மதிப்பிடுவதற்காக விருதுகள் மற்றும் வெகுமதிகள் என்பவற்றை வழங்குவதற்காக அவர்களின் புத்தக கணிப்பீட்டு நடவடிக்கைகளுக்காகவும் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,625,343 தொகை அதாவது மொத்தச் செலவினத்தில் 36% ஆக இருந்தது. இதன் பிரகாரம் செலவினத்தின் கூடுதலான சதவீதம் குறித்த நோக்கத்திற்காக ஒதுக்கப்படாமை காரணமாக அச்செலவினங்கள் பயனற்றதாக இருந்தமை சர்ச்சைக்குரியதாக இருந்தது.

(ii) கலாசார அதிகாரக்குழுக்கள் ஊடாக 2013 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த "உள்நாட்டு உணவு கலாசார மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கான" ஆரம்ப செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் 215 பிரதேச செயலகங்களுக்கும் 23 மாவட்ட செயலகங்களுக்கும் ரூபா 2,700,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது.

## 2.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் கொடுக்கல் வாங்கல் முறையற்ற விதத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### (அ) கொள்வனவு வழிகாட்டி செயற்பாடுகளிலிருந்து விலகல்

2013 அரச கலாசார விழாவிற்காக கலாசார விசேட வலயம், அழைப்பிதழ்கள், கடித உரைகள், நினைவுச் சின்னங்கள், சான்றிதழ்கள் என்பவற்றை அச்சிடுவதற்காக 2013 யூலை 15 ஆம் திகதி மு.ப 10.30 இற்கு முன்னர் கூறுவிலைகளை அனுப்புமாறு 2013 யூலை 01 ஆம் திகதி மட்டுத்தப்படுத்தப்பட்ட விலை கோரப்பட்டிருந்தன. எனினும் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்காத கம்பனியொன்றுக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. கொள்வனவுச் செயற்பாடு களிலிருந்து விலகி அந்நிறுவனத்திற்கு அச்சீட்டுச் செயற்பாட்டை கையளித்து அச்சீட்டுச் செலவினமாக ரூபா 972,982 செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. கூறுவிலை சமர்ப்பித்த நிறுவனங்களிடமிருந்து இச்செயற்பாடு நிறைவேற்றப்படாமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 130,720 ஆக இருந்தது.

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 25 | 11 | 14 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 524 | 459 | 65 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 89 | 51 | 38 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 82 | 70 | 12 |
| | | ------- | ------ | ----- |
| | மொத்தம் | 723 | 592 | 131 |
| | | ==== | ==== | ==== |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 131 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.